RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 291 | அக்டோபர்.22 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## வர்த்தக ஒப்பந்தம் செய்யாவிட்டால் நவ.1லிருந்து 155% வரி: சீனாவுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை

பீஜிங், அக்.22-

"சீனா ஒரு நியாயமான வர்த்தக ஒப்பந்தத்துக்கு முன்வராவிட்டால் அந்நாட்டுப் பொருட்கள் மீது 155% வரி விதிக்க வேண்டிய சூழல் ஏற்படும்." என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.



முன்னதாக, வெள்ளை மாளிகையில் ஆஸ்திரேலிய பிரதமர் ஆண்டனி அல்பானீஸுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையை ட்ரம்ப் நடத்தினார். அதன்பின்னர் பேசிய ட்ரம்ப், "சீனாவை அமெரிக்கா மிகுந்த மரியாதையுடன் நடத்தியது. ஆனால், நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளை சீனா தொடர்ந்தால் அதனை அமெரிக்கா பொறுத்துக் கொள்ளாது. சீனாவும் எங்களை மதிக்கிறது என்று நான் நம்புகிறேன்.

அவர்கள் தற்போது 55% வரி செலுத்துகிறார்கள். இதுவே அதிகம் தான். இந்நிலையில், சீன அதிபர் ஜி ஜின்பிங் அமெரிக்காவுடன் ஒரு நியாயமான வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடாவிட்டால் நவம்பர் 1ம் தேதி முதல் சீனா 155% வரை வரிகளை எதிர்கொள்ள நேரிடும்.

வர்த்தகப் பேச்சு வார்த்தை மேசையில் தீர்க்கப்பட வேண்டிய தனது முக்கியக் கோரிக்கைகளான அரிதான கனிமங்கள், ஃபெண்டானில் மற்றும் சோயாபீன்ஸ் ஆகியவற்றை அவர் பட்டியலிட்டார். புதிய ஏற்றுமதி தடைகளையும் விதிப்போம்.

ஆண்டாண்டுகாலமாக அமெரிக்காவை வர்த்தக ரீதியாக உலக நாடுகள் தமக்கு சாதகமாகப் பயன் படுத்திய சகாப்தமெல்லாம் முடிந்துவிட்டது. இனியும் அவர்கள் அமெரிக்காவை அப்படிப் பயன்படுத்திக் கொள்ள முடியாது. அமெரிக்கா அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பதில் வரி விதிப்புக்குப் பின்னர் எங்களை பயன்படுத்திக் கொள்ளும் போக்கு மாறி விட்டது.

வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக சீன அதிபர் ஜி ஜின்பிங்கை சந்திக்க நான் தயாராக இருக்கிறேன். எங்களுக்குள் மிகச் சிறந்த உறவு உள்ளது. விரைவில் நாங்கள் சந்திப்போம். அமெரிக்கா சீனா இடையேயான வலுவான வர்த்தக ஒப்பந்தம் ஏற்படும் என்று நம்புகிறோம். இருவருமே மகிழ்ச்சியான ஒரு முடிவை எட்டுவோம்." என்றார்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பின் இந்தப் பேட்டி வெளியான சில மணி நேரங்களிலேயே உலக வர்த்தக அமைப்புக்கான (டபிள்யுடிஓ WTO) சீனாவின் நிரந்தரப் பிரதிநிதியாக இருந்த லீ செங்காங் மாற்றப்பட்டார். அவருக்குப் பதிலாக அப்பதவியில் லீ யோங்ஜி நியமிக்கப்பட்டுள்ளார்.

## கேதார கௌரி விரதம்: ஐப்பசி அமாவாசையை முன்னிட்டு வீடு, கோயில்களில் மக்கள் வழிபாடு

சென்னை, அக்.22-

ஐப்பசி மாத அமாவாசை நாளில் மக்கள் கேதார கௌரி விரதம் இருந்து நோன்பு எடுப்பது வழக்கம். இந்த நாளில் மக்கள் தங்களின் வீடுகள் மற்றும் கோயில்களில் சிறப்பு வழிபாடு மேற்கொள்வது வழக்கம்.



அந்த வகையில் ஐப்பசி மாத அமாவாசையை முன்னிட்டு தமிழகம் முழுவதும் நோன்பு எடுக்கும் வழக்கம் கொண்ட மக்கள், கேதார கௌரி விரத நோன்பை கடைபிடிக்கின்றனர். இந்நாளில், மக்கள் வீடு மற்றும் கோயில்களில் நோன்பு எடுப்பார்கள்.

தேங்காய், வாழைப்பழம் உள்ளிட்ட கனிகள், வெற்றிலை பாக்கு, பூ, நோன்பு கயிறு உள்ளிட்டவற்றை வைத்து தெய்வத்தை வழிபட்டு பின்னர் நோன்பு கயிறை கைகளில் கட்டிக் கொள்வார்கள். கேதார கௌரி விரதத்தை முன்னிட்டு தமிழகம் முழுவதும் பெரும்பாலான கோயில்கள் அதிகாலை முதலே திறந்துள்ளன. மக்களும் கோயில்களில் நோன்பு எடுத்து வருகின்றனர்.

நேற்று (அக்.21) மாலை 5.46 வரை அமாவாசை திதி இருப்பதனால் அது வரை மக்கள் நோன்பு எடுக்கலாம் என புதுச்சேரியை சேர்ந்த அர்ச்சகர் ஸ்ரீராம் தெரிவித்துள்ளார். ராகு காலம் (பிற்பகல் 3 மணி முதல் 4.30 மணி வரை), எமகண்டத்தை (காலை 9 மணி முதல் 10.30 மணி வரை) தவிர்த்து மக்கள் நோன்பு எடுக்கலாம் என அவர் கூறியுள்ளார்.

கேதார கௌரி விரதம்: கேதார கௌரி நோன்பு கொண்ட அற்புதமான நாளில், வயது முதிர்ந்த தம்பதிக்கு புத்தாடை வழங்கி, மங்கலப் பொருட்கள் கொடுத்து நமஸ்கரித்தால், பிரிந்த தம்பதியும் ஒன்று சேருவார்கள் என்கிறார்கள் ஆச்சார்யப் பெருமக்கள்.

கேதாரம் என்றால் வயல். கௌரியாகிய பார்வதி வயல்வெளியில் தவம் இருந்து சிவபெருமானின் அருளைப் பெற்றதால் இந்த விரதம் கேதார கௌரி விரதம் எனப்படுகிறது. மனதில் வயல் போன்ற பசுமையான எண்ணங்களை வளர்த்துக் கொண்டு இறைவனை மனப்பூர்வமாக வணங்கினாலே போதும். பூஜையறையில் விளக்கேற்றி சிவபெருமான் குறித்த பாடல்களைப் பாடி ஆராதனை செய்யலாம். அதேபோல், சிவபார்வதி படத்துக்கு முன்னால் அமர்ந்து அமைதியாக தியானிக்க வேண்டும்.

கேதார கௌரி விரதத்துக்கெனத் தனியாகப் பாயசம் அல்லது அப்பம் அல்லது சர்க்கரைப் பொங்கல் என நைவேத்தியம் செய்து வணங்கி வழிபடலாம். அம்பாள் துதியைப் பாராயணம் செய்யலாம். சிவ மந்திரங்களைச் சொல்ல வேண்டும். இதனால், சிவனாரின் அருளையும் உமையவளின் அருளையும் பெறலாம். ருத்ரம் ஜபித்து பாராயணம் செய்யலாம். முக்கியமாக ஓம் நமசிவாய, சிவாய நம ஓம் என்ற பஞ்சாட்சர மந்திரத்தை அன்றைய தினம் முழுக்க சொல்லிக்கொண்டே இருக்கலாம்.

சிவ பார்வதியை வணங்குவதும் பசுவுக்கு அன்னமிடுவதும் விசேஷ பலன்களைத் தந்தருளும் என்பது ஐதீகம். பசுவுக்கு உணவிட்டு, யாரேனும் ஒருவருக்கு புத்தாடைகள் வழங்கி நமஸ்கரித்தால், பிரிந்த கணவனும் மனைவியும் ஒன்று சேருவார்கள். சேர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் தம்பதி, கருத்தொருமித்த தம்பதியாக, ஆதர்ஷ தம்பதியாக, இணையற்ற தம்பதியாக வாழ்வார்கள் என்கிறார்கள் ஆச்சார்யப் பெருமக்கள்.

## தீபாவளி பண்டிகைக்காக அறிவிக்கப்பட்ட 6 சிறப்பு ரயில்கள் ரத்து: தெற்கு ரயில்வே அறிவிப்பு

சென்னை, அக்.22-

தீபாவளி பண்டிகைக்காக மதுரை வழியாக சென்னை சென்ட்ரல் மற்றும் செங்கோட்டை இடையே முதலில் சிறப்பு ரயில் அறிவிக்கப்பட்டது. பின்னர் இந்த ரயில் சேவையானது, கோட்டயம் வரை நீட்டிக்கப்பட்டது. இந்த வழித்தடத்தில் அக்.1, 8, 15 மற்றும் 22 ஆகிய தேதிகளில் ரயில்கள் இயங்கும் என்று தெற்கு ரயில்வே அறிவித்தது. இந்த ரயில்கள் புனலூர், கொட்டாரக்கரா, கொல்லம் மற்றும் செங்கனூரில் நின்று செல்லும் என்றும் தெற்கு ரயில்வே கூறியிருந்தது. தெற்கு ரயில்வே எதிர்பார்த்தபடி, அக்டோபர் 1ம் தேதி முதல் பயணிகள் முழுமையாக முன்பதிவு செய்திருந்தனர். தீபாவளி நேரத்தில் கூட்ட நெரிசல் இருந்த போதிலும், அடுத்தடுத்த பயணங்களின் போது இந்த கூட்டம் குறைவாக காணப்பட்டது.

மூன்றடுக்கு குளிர் சாதன வசதி கொண்ட பெட்டிகளும் இந்த ரயில் சேவையில் இணைக்கப்பட்டு இருந்தது. ஆனால், எதிர்பார்த்த படி பயணிகள் முன்பதிவு செய்ய ஆர்வம் காட்டவில்லை. இதையடுத்து, சென்னை சென்ட்ரல் கோட்டயம் இடையே அக்.22ம் தேதி இயக்கப்படும் சிறப்பு ரயில்(06121) ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரயில்வே அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதேபோன்று, அக்.23ம் தேதி மறுமார்க்கமாக கோட்டயம் சென்னை சென்ட்ரல் ரயில் சேவையும் (06122) ரத்து செய்யப்படுவதாக ரயில்வே அதிகாரிகள் கூறி உள்ளனர். அதே போல், நெல்லை செங்கல்பட்டு, செங்கல்பட்டு நெல்லை, நாகர்கோவில் சென்ட்ரல், சென்ட்ரல் நாகர்கோவில் ஆகிய 6 ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

# பருவமழை காலத்தில் நீர்வழிப் பாதைகளை மேம்படுத்தி சீரமைப்பு பணி

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் ஆய்வு

சென்னை, அக்.22-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தென்சென்னை பகுதியில் நீர்வழிப் பாதைகளை மேம்படுத்தி பருவமழை காலத்தில் வெள்ள நீர் எளிதில் கடலில் சென்று சேரும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சீரமைப்பு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் எதிர்பாராத பெரும் மழையினால் வெள்ளம் ஏற்பட் டாலும், சென்னையில் நீர்தேங்காமல் இருப்பதற்காக நீர்வளத்துறை, சென்னை பெருநகர மாநகராட்சி ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள கால்வாய்களில் ஆழப்படுத்துதல், அகலப்ப டுத்துதல், கான்கிரீட் சுவருடன் கூடிய மூடு கால்வாய் அமைத்தல், மழைநீர் கால்வாய்கள் அமைத்தல், கால்வாய்கள் கடலுடன் சேரும் பகுதிகள், முகத்துவாரப் பகுதிகளில் தொடர்ந்து தூர்வாருதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டு வருகின்றார்.

இதன் காரணமாக கடந்த ஆண்டுகளில் ஒரு சில மணி நேரங்களிலேயே அதிக அளவில் மழை பெய்தபோதும், சில மணி நேரங்களிலேயே வெள்ள நீர் வடிந்து உடனடியாக போக்குவரத்து நடைபெறும் நிலை உருவானது. இதன் தொடர்ச்சியாக, தற்காலத்தில் இந்தியா முழுவதும் பல்வேறு இடங்களில் ஏற்படும் மேகவெடிப்பு உள்ளிட்ட பெருமழையினால் திடீர் வெள்ளம் ஏற்பட்டாலும் அதனை எதிர்கொள்ளும் வகையில் சென்னையின் பல்வேறு பகுதிகளில் மழை வெள்ள முன்னேற்பாட்டு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த பணிகளை ஆய்வு செய்து மீதமுள்ள பணிகளை துரிதப்படுத்தும் வகையில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் (20.10.2025) அன்று, தென்சென்னை பகுதியில் நீர்வழிப் பாதைகளை மேம்படுத்தி பருவமழை காலத்தில் வெள்ள நீர் எளிதில் கடலில் சென்று சேரும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சீரமைப்பு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முதலாவதாக ஒக்கியம் மடுவு கால்வாயில் 27.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளில் ஒரு பகுதியாக காரப்பாக்கத்தில் சென்னை மெட்ரோ இரயில் மேம்பாலப் பணி நடைபெற்று வரும் பகுதியில் மடுவின் கரைகளை அகலப்படுத்தி சீரமைக்கும் பணியினால் நீர் தடையின்றி செல்வதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து ஒக்கியம் மடுவு கால்வாயில் 27.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளில் ஒரு பகுதியாக பள்ளிக்கரணை சதுப்புநிலப்பகுதிகளில் இருந்து வெளியேறும் நீர் எளிதாக கடலுக்கு செல்லும் வகையில், கண்ணகி நகர் பகுதியில் தூர்வாரும் பணிகளையும், நீர் தடையின்றி செல்வதையும் மடுவின் வலதுபுற கரையில் தனியார் கல்லூரி பகுதியில் இருந்து, பார்வையிட்டார்.

மேலும், ஒக்கிய மடுவு காரப்பாக்கம் பாலத்தின் கீழ்ப்புறம் தூர்வாரும் பணிகளையும், மற்றுமொரு தனியார் கல்லூரிக்கு செல்லும் வழியில் வலது புற கரையை அகலப்படுத்தும் பணிகளையும் பார்வையிட்டார். அப்பகுதியில் மணல் திட்டுக்களை அகற்றும் பணிகளையும், கண்ணகி நகர் பகுதியில் இடது புற கரையையும், தடுப்புச்சுவர் கட்டும் பணிகளையும் பார்வையிட்டு, சீரமைப்பு மற்றும் கட்ட மைப்பு பணிகளை விரைந்து முடிக்குமாறு நீர்வளத்துறை அலுவலர்களுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுரு த்தினார்.

சோழிங்கநல்லூர் பகுதியில் சதுப்பு நிலத்தில் நீர் எளிதாக செல்லவதற்காக, மேடவாக்கம் மற்றும் சோழிங்கநல்லூரை இணைக்கின்ற வகையில் நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் புதிதாக கட்டப்ப ட்டுள்ள உயர் மட்ட பாலத்தை பார்வையிட்டதுடன், மழைக்காலத்தில் வெள்ள நீர் தடையின்றி எளிதில் செல்லும் வகையில் பழைய பாலத்தை விரைவாக இடித்து அப்புறப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளவும், சீரமைக்கவும் நெடுஞ்சாலைத் துறை அலுவல ர்களுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வில் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், நீர்வளத்துறைச் செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், உள்பட நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# வைகை அணையில் உபரி நீர் வெளியேற்றம்: 5 மாவட்ட கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

ஆண்டிபட்டி, அக்.22-

வைகை அணையின் நீர்மட்டம் 69 அடியாக உயர்ந்ததால் 5 மாவட்ட கரையோர மக்களுக்கு மூன்றாம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை அறிவிக்கப்பட்டுள்ளது. உபரி நீர் பெரிய, சிறிய மதகுகள் வழியே வெளியேற்றப் பட்டு வருவதால் யாரும் ஆற்றுக்குள் இறங்கவோ, வீடியோ எடுக்கவோ கூடாது என்று நீர்வளத் துறையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.



தேனி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் மூல வைகை, முல்லை பெரியாறு மற்றும் வைகையின் துணை ஆறுகளான கொட்டக்குடி, வராக நதி, சுருளி ஆறு உள்ளிட்ட பல ஆறுகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் வைகை அணைக்கான நீர்வரத்து விநாடிக்கு 25 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது. ஆகவே கடந்த 18ம் தேதி ஒரே நாளில் நீர்மட்டம் 4 அடி உயர்ந்து 66 அடியை எட்டியது. இதனைத் தொடர்ந்து முதல் வெள்ள அபாய எச்சரிக்கை அறிவிக்கப்பட்டது.


தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்த நிலையில் நீர்மட்டம் நேற்று (அக்.20) 69 அடியாக உயர்ந்தது. 71 அடி வரை நீர் தேக்கலாம் என்றாலும், அதிகப் படியான நீர் வந்து கொண்டிருந்ததால் உபரி நீரை அப்படியே வெளியேற்ற நீர்வளத் துறையினர் முடிவு செய்தனர். இதற்காக மூன்றாவது வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அணையில் உள்ள அபாய சங்கு மூன்று முறை பலமாக ஒலிக்கப்பட்டது. பின்பு பெரிய, சிறிய மதகுகளின் வழியே 5 ஆயிரத்து 635 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது. இதனால் பூங்காவில் உள்ள தரைப்பாலம் மூழ்கியது. இப்பகுதியை கடக்க தடை விதிக்கப்பட்டது.

அணையின் நீர்ப் பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழையினால் நீர்வரத்து இன்று காலை 6.30 மணிக்கு 4 ஆயிரத்து 875 கனஅடியாக இருந்தது. மழை நேரம் என்பதால் அலுவலர்கள் ஒவ்வொரு மணி நேரத்துக்கும் ஒரு முறை நீரை அளவீடு செய்து வருகின்றனர். இதன்படி இன்று காலை 10 மணிக்கு நீர்வரத்து 3 ஆயிரத்து 630 கனஅடியாக இருந்தது.

நீர்வரத்துக்கு ஏற்ப வெளியேற்றப்படும் நீரின் அளவும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. ஆகவே தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கரையோர மக்கள் கவனமுடன் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர். பொதுமக்கள் யாரும் ஆற்றுக்குள் இறங்கவோ, குளிக்கவோ கூடாது. செல்ஃபி, புகைப்படம், வீடியோ எடுக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது நீர்மட்டம் 69.15 அடியாகவும் (மொத்த அளவு 71). விநாடிக்கு 3 ஆயிரத்து 630 கனஅடி நீர்வரத்து உள்ளது. இந்த நீர் அப்படியே உபரியாக வெளியேற்றப்பட்டு வருகிறது. கால்வாய் வழியே ஆயிரத்து 280 கனஅடி நீரும், ஆற்றில் 2 ஆயிரத்து 281 கனஅடியும், குடிநீர் திட்டங்களுக்காக 69 கனஅடி நீரும் சென்று கொண்டிருக்கின்றன.

## மாவோயிஸ்ட் தீவிரவாதம் ஒழிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு இந்த தீபாவளி மிகவும் சிறப்பானது: பிரதமர் மோடி



புதுடெல்லி, அக்.22-

மாவோயிஸ்ட் தீவிரவாதம் ஒழிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு இந்த தீபாவளி மிகவும் சிறப்பானதாக இருந்ததாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தீபாவளியை முன்னிட்டு பிரதமர் மோடி நாட்டு மக்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், "உற்சாகம் நிறைந்த தீபாவளி பண்டிகையை முன்னிட்டு உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்பட்ட பிறகு இது இரண்டாவது தீபாவளி. பகவான் ஸ்ரீ ராமர், நீதியை நிலைநிறுத்தக் கற்றுக் கொடுக்கிறார், அநீதியை எதிர்த்துப் போராட தைரியத்தைத் தருகிறார். சில மாதங்களுக்கு முன்பு நிகழ்ந்த ஆபரேஷன் சிந்தூர் இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. ஆபரேஷன் சிந்தூரின்போது நமது நாடு நீதியை நிலைநாட்டியது. அது மட்டுமல்லாமல், அநீதியை பழிவாங்கியது.

இந்த தீபாவளி மிகவும் சிறப்பு வாய்ந்தது. ஏனெனில், நக்ஸலிசம் மற்றும் மாவோயிஸ்டு தீவிரவாதம் வேரோடு பிடுங்கி எரியப்பட்ட மாவட்டங்களில் உள்ள மக்களும் இம்முறை தங்கள் பகுதிகளில் தீபாவளியன்று விளக்குகளை ஏற்றி பண்டிகையைக் கொண்டாடினர். சமீப காலங்களாக, மாவோயிஸ்டுகள் வன்முறைப் பாதையைக் கைவிட்டு, வளர்ச்சி நீரோட்டத்தில் இணைந்து நமது நாட்டின் அரசியலமைப்பின் மீது நம்பிக்கையை வெளிப்படுத்தியதைக் கண்டோம். இது நாட்டுக்கு மிகப் பெரிய சாதனை.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனைகளுக்கு மத்தியில், நாடு அடுத்த தலைமுறை சீர்திருத்தங்களிலும் இறங்கியுள்ளது. நவராத்திரியின் முதல் நாள் முதல் குறைந்த ஜிஎஸ்டி விகிதங்கள் அமல்படுத்தப்பட்டன. இந்த ஜிஎஸ்டி சேமிப்பு விழாவின்மூலம் நாட்டு மக்கள் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை சேமித்து வருகின்றனர்.

பல நெருக்கடிகளை சந்தித்து வரும் உலகில், இந்தியா நிலைத்தன்மை மற்றும் உணர்திறன் (stability and sensitivity) ஆகிய இரண்டின் அடையாளமாக உருவெடுத்துள்ளது. எதிர்காலத்தில் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறுவதற்கான பாதையில் நாம் இருக்கிறோம். வளர்ச்சி அடைந்த இந்தியா மற்றும் தற்சார்பு இந்தியா என்ற இந்த பயணத்தில், குடிமக்களாகிய நமது முதன்மையான பொறுப்பு, நாட்டுக்கான நமது கடமைகளை நிறைவேற்றுவதாகும்.

உள்ளூர் தயாரிப்புகளையே வாங்குவோம். இது சுதேசி என்று பெருமையுடன் கூறுவோம். ஒரே பாரதம்; உன்னத பாரதம் என்ற உணர்வை ஊக்குவிப்போம். அனைத்து மொழிகளையும் மதிப்போம். தூய்மை பேணுவோம். நமது ஆரோக்கியத்துக்கு முன்னுரிமை அளிப்போம். நமது உணவில் எண்ணெய் பயன்பாட்டை 10% குறைத்து யோகாவை ஏற்றுக்கொள்வோம். இந்த முயற்சிகள் அனைத்தும் நம்மை வளர்ச்சி அடைந்த இந்தியாவை நோக்கி விரைவாக நகர்த்தும்.

ஒரு விளக்கு மற்றொரு விளக்கை ஏற்றும்போது அதன் ஒளி குறையாது. மாறாக அது மேலும் வளரும். இதையே தீபாவளி நமக்கு கற்பிக்கிறது. இதே மனப்பான்மையுடன் இந்த தீபாவளியில் நமது சமூகத்திலும் சுற்றுப்புறத்திலும் நல்லிணக்கம், ஒத்துழைப்பு மற்றும் நேர்மறைத் தீபங்களை ஏற்றுவோம்" என தெரிவித்துள்ளார்.

## வட கிழக்கு பருவமழை கேரளாவில் தீவிரமடைய வாய்ப்பு: 10 மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை



புதுடெல்லி, அக்.22-

வட கிழக்குப் பருவமழை அடுத்த 24 மணி நேரத்தில் கேரளாவில் தீவிரமடைய வாய்ப்புள்ளதாக கணித்துள்ள இந்திய வானிலை ஆய்வு மையம் பாலக்காடு, கோழிக்கோடு உள்பட 10 மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தென்கிழக்கு அரபிக்கடலில் நிலை கொண்டுள்ள தீவிரமான குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, தீவிர காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக மாறும் அபாயம் உள்ளது. இதன் காரணமாகவே, கேரளாவில் பரவலாக மழை பெய்யத் தொடங்கி உள்ளது. அடுத்த 48 மணி நேரத்தில் வடகிழக்குப் பருவமழை கேரளாவில் தீவிரமடையும் வாய்ப்புள்ளது.

பத்தினம்திட்டா, ஆலப்புழா, கோட்டயம், எர்ணாகுளம், இடுக்கி, திருச்சூர், பாலக்காடு, மலப்புரம், கோழிக்கோடு, வயநாடு ஆகிய மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது" என தெரிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவிலும் அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. "தெற்கு அந்தமான் கடல் மற்றும் அதை ஒட்டிய தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் சராசரி கடல் மட்டத்திலிருந்து 1.5 கிலோ மீட்டர் வரை மேல் காற்று சுழற்சி நீடிக்கிறது. இதனால், அடுத்த 24 மணி நேரத்தில் வங்காள விரிகுடாவில் குறைந்த காற்றழுத்தப் பகுதி உருவாகும்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ. 947 கோடி உதவித் தொகையை குஜராத் அரசு அறிவித்துள்ளது. மாநில பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ரூ.563 கோடி, மாநில அரசின் பட்ஜெட் நிதியில் இருந்து ரூ. 384 கோடி என மொத்தம் ரூ. 947 கோடி நிவாரணமாக வழங்கப்படும் என குஜராத் அரசு அறிவித்துள்ளது. ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் பெய்த கனமழையால் பயிர் சேதம் அடைந்த 5 மாவட்ட விவசாயிகளுக்கு இந்த நிதி உதவி வழங்கப்பட உள்ளது.

## 5 ஆண்டுக்குப் பிறகு நவ.9ம் தேதி முதல் இந்தியாவுக்கு நேரடி விமான சேவை: சீனாவின் ஈஸ்டர்ன் ஏர்லைன்ஸ் அறிவிப்பு



புதுடெல்லி, அக்.22-

வரும் நவம்பர் 9ம் தேதி முதல் இந்தியாவுக்கு நேரடி விமான சேவை மீண்டும் இயக்கப்படும் என சீன நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த 2020ம் ஆண்டு மார்ச் மாதம் கரோனா தொற்று பரவல் காரணமாக சர்வதேச விமான சேவை முற்றிலும் நிறுத்தப்பட்டது. அதே ஆண்டு மே மாதம் லடாக்கின் கல்வான் பள்ளத்தாக்கில் இந்தியா மற்றும் சீன ராணுவம் இடையே மோதல் ஏற்பட்டது. இதனால், இருதரப்பு உறவில் விரிசல் ஏற்பட்டது. இதனால், கரோனாவுக்கு பிறகும் சீனாவுக்கு நேரடி விமான சேவை தொடங்கப்படவில்லை. கடந்த 5 ஆண்டுகளாக பக்கத்து நாடுகள் மூலமாகவே சீனாவுக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது.

இந்த சூழ்நிலையில் இரு நாடுகளுக்கிடையிலான உறவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, வரும் அக்டோபர் 26ம் தேதி முதல் சீனாவுக்கு நேரடி விமான சேவை இயக்கப்படும் என மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சகம் கடந்த 2ம் தேதி அறிவித்தது. இதன்படி, இந்தியாவின் இண்டிகோ நிறுவனம்

5 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக கொல்கத்தா குவாங்சு (சீனா) இடையே 26ம் தேதி முதல் தினசரி விமான சேவையை தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளது. இதுபோல, டெல்லிகுவாங்சு இடையே நவம்பர் 10ம் தேதி முதல் விமான சேவை தொடங்கும் என அறிவித்துள்ளது.

இதுபோல, இந்த ஆண்டு இறுதிக்குள் சீனாவுக்கு நேரடி விமான சேவை இயக்கப்படும் என ஏர் இந்தியா நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த சூழலில், ஷாங்காய்டெல்லி இடையே நவ.9ம் தேதி விமான சேவை (வாரத்துக்கு 3 நாள்) தொடங்கப்படும் என சீனாவைச் சேர்ந்த ஈஸ்டர்ன் ஏர்லைன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரேசன் பொருட்களை வீடு தேடி வழங்கிவரும்

## தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசுக்கு மாற்றுத்திறனாளிகள், வயது முதிர்ந்தோர் நன்றி தெரிவித்துள்ளனர்





தமிழ்நாட்டில் உள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே நேரடியாக சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் "முதலமைச்சரின் தாயுமானவர்" என்ற சிறப்பான திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு ரேசன் பொருட்களை வழங்கி தொடங்கி வைத்துள்ளார்கள்.

வயது முதிர் ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் குடிமைப் பொருட்களை பெற்று எடுத்துச் செல்வதில் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர் என்பதை அறிந்து அவர்களின் வீட்டிற்கே சென்று குடிமைப் பொருட்களை வழங்கும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் 1389 நியாய விலை கடைகள் இருக்கிறது. இதில் 70,311 நபர்கள் மாற்றுத்திறனாளிகள் மற்றும் 70 வயதிற்கு மேற்பட்டோர் உள்ளனர். நியாய விலை கடைகளை 725 குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இக்குழுக்களில் உள்ள முதன்மை நியாய விலை கடைகளை தேர்வு ஒரு நியாய விலை கடைக்கு அதிகபட்சமாக 60 குடும்ப அட்டைகள் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் "முதலமைச்சரின் தாயுமானவர்" திட்டதின் கீழ் பயன்பெறும் 70 வயதிற்கு மேற்பட்டோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் இல்லங்களுக்கு நேரடியாக சென்று நியாய விலை கடை அலுவலர்கள் அவர்களின் முன்னிலையில் மின்னனு தராசின் மூலம் எடையிட்டு குடிமைப் பொருட்களை வழங்கி வருகிறார்கள்.

இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த ஜெயப்பிரியா அவர்கள் தெரிவிக்கையில்:

நடக்கமுடியாமல் படுத்த நிலையில் இருக்கும் மாற்றுத்திறனாளியான எனக்கு எனது தந்தை தான் இதுநாள் வரை ரேஷன் கடைக்கு சென்று பொருட்களை வாங்கி வந்தார். தற்போது தாயுமானவர் திட்டம் அமலான பிறகு ரேஷன்கடை ஊழியர் வீட்டிற்கே வந்து பயோமெட்ரிக் இயந்திரத்தில் கைரேகை பதிவு செய்து அரிசி, பருப்பு, பாமாயில், சீனி உள்ளிட்ட பொருட் களை வழங்கி வருகிறார். முன்னர் ரேஷன் கடைகளில் அனைத்து பொருட்களையும் ஒரே நாளில் வாங்க முடியாது. வெவ்வேறு நாட்களுக்கு சென்று வாங்கும் நிலை இருந்தது. தற்போது தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்களின் கருணையான நடவடிக்கையால் எங்கள் குடும்பத்திற்கு தேவையான ரேஷன்பொ ருட்கள் எங்களது வீடு தேடி வருகிறது. எங்களைப் போன்றவர்களை மட்டுமின்றி. மூத்த குடிமக்களின் நலனையும் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்கள் இத்திட்டத்தில் சேர்த்தது, மூத்த குடிமக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இதனால் எங்கள் சிரமம் குறைந்துள்ளது. ரேஷன் கடைக்கு அலைச்சல் இன்றி வீட்டில் இருந்தபடியே வயி றாற சாப்பிட முடிகிறது. எங்களை மதித்து இப்படிப் பட்ட உன்னதமான திட்டத்தை தந்த முதல்வருக்கு எங்களது நெஞ்சம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.



## காவலர் வீரவணக்க நாள்: காவலர் நினைவுச் சின்னத்தில் முதல்வர் ஸ்டாலின் மரியாதை

சென்னை, அக்.22-

காவலர் வீரவணக்க நாளையொட்டி தமிழக முதல்வர் ஸ்டாலின் காவலர் நினைவு சின்னம் முன்பாக மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 21ஆம் நாள் காவலர் வீரவணக்க நாள் அனுசரிக்கப்படுகிறது. கடந்த 1959ஆம் ஆண்டு லடாக் பகுதியில் சீனப்படைகள் நடத்திய திடீர் தாக்குதலில் 10 மத்திய ரிசர்வ் போலீஸ் படை (சிஸிறிதி) வீரர்கள் கொல்லப்பட்டதை நினைவுகூறும் விதமாகவும், காவல்துறையில் பணியில் இருந்த போது உயிர் தியாகம் செய்த காவலர்களின் தியாகத்தை போற்றும் விதமாகவும் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.

இதனையொட்டி, தமிழக முதல்வர் ஸ்டாலின் இன்று (21.10.2025) சென்னை காவல்துறை தலைமை அலுவலக வளாகத்தில் காவலர் வீரவணக்க நாளையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில், வீரமரணம் அடைந்த காவலர் நினைவு சின்னம் முன்பாக மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

காவலர் வீரவணக்க நாள் விழாவில், தமிழக முதல்வர் கலந்து கொள்வது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

அதனையொட்டி, 175 காவலர் குடும்பத்தின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள், வழங்குவதின் அடையாளமாக 20 வாரிசுதாரர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். மேலும், பணியின் போது உயிரிழந்த பல்வேறு காவலர்களின் குடும்பத்தினர்களுக்கு மொத்தம் ரூ.5.70 கோடி காப்பீட்டுத் தொகை மற்றும் கருணைத் தொகையையும் வழங்கினார்.

## 'எட்டு மாதங்களில் எட்டு போர்களை நான் நிறுத்தி உள்ளேன்' ட்ரம்ப் பேச்சு

வாஷிங்டன், அக்.22-

கடந்த எட்டு மாதங்களில் உலக நாடுகளுக்கு இடையிலான எட்டு போர்களை நிறுத்தி உள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் அமெரிக்க நாட்டின் அதிபராக டொனல்டு ட்ரம்ப் பதவியேற்றார். அப்போது முதல் அதிரடி நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டு வருகிறார். அதில் அமெரிக்காவின் வளர்ச்சி அமைந்துள்ளதாக அவர் கூறி வருகிறார். அந்த வகையில் சட்டவிரோதமாக குடியேறியவர்களை நாடு கடத்துவது, வெளிநாடுகள் அமெரிக்காவில் இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு கூடுதல் வரி விதிப்பது உள்ளிட்ட நடவடிக்கைகளும் இதில் அடங்கும்.

முக்கியமாக உலக நாடுகளுக்கு இடையிலான போர்களை நிறுத்தி உள்ளதாக அவர் தெரிவித்து வருகிறார். கடந்த மே மாதம் இந்தியா பாகிஸ்தான் இடையிலான போரை தனது தலையீடு காரணமாக நிறுத்தியதாக அவர் தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

"கடந்த எட்டு மாதங்களில் எட்டு போர்களை நான் நிறுத்தியுள்ளேன். இன்னும் ஒரு போரை நான் நிறுத்த வேண்டி உள்ளது. அது ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலானது. அந்த முயற்சியில் வெற்றி பெறுவோம் என நம்புகிறோம்.

வணிகம் மற்றும் வரி விவகாரத்தை சுட்டிக்காட்டி இந்த எட்டு போர்களில் ஐந்து போர்களை நிறுத்தி உள்ளோம். இந்த போர்களை நிறுத்தியதற்காக நான் பெருமை கொள்கிறேன். இது போல எந்தவொரு அமெரிக்க அதிபரும் செயல்பட்டது அல்ல என நான் கருதுகிறேன்" என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

## அரியலூர் அருகே ஜவுளிக் கடையில் தீ விபத்து ரூ.3 லட்சம் பணம், துணிகள் சேதம்




அரியலூர், அக்.22-

துணிக்கடையில் மின் கசிவு காரணமாக தீப்பற்றியதில் ரூ.3 லட்சம் பணம், பல லட்சம் ரூபாய் மதிப்பிலான துணிகள் மற்றும் மின் சாதன பொருட்கள் தீயில் எரிந்து சேதமடைந்தது.

அரியலூர் நகரின் முக்கிய கடை வீதிப் பகுதியான தேரடியில் சண்முகம் என்பவர், கடந்த பல ஆண்டுகளாக சண்முகா என்ற பெயரில் ஜவுளிக் கடை நடத்தி வருகிறார். தீபாவளி விற்பனையை முடித்து நேற்று (அக்.20) இரவு 7 மணிக்கு கடையை பூட்டிவிட்டு, சண்முகம் தனது வீட்டுக்கு சென்றுள்ளார்.

இந்நிலையில் இரவு 11 மணி அளவில் ரோந்து சென்ற போலீசார் சண்முகத்துக்கு சொந்தமான துணிக்கடையில் இருந்து புகை வெளி வருவதை கண்டறிந்துள்ளனர். மேலும், சந்தேகம் அடைந்த காவலர்கள் அருகில் சென்று பார்த்த போது கடையில் தீப்பற்றியுள்ளது தெரியவந்தது.

உடனடியாக தீயணைப்புத் துறையினருக்கு தகவல் தெரிவித்த காவல்துறையினர், துணிக்கடை உரிமையாளர் சண்முகத்துக்கும் தகவலை தெரிவித்துள்ளனர். தகவலறிந்து உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்த அரியலூர் தீயணைப்பு நிலைய அலுவலர் செந்தில் குமார் தலைமையிலான வீரர்கள் உடனடியாக தீயை கட்டுப்படுத்தினர்.

மேலும், அடுத்தடுத்த கடைகளுக்கும் தீ பரவுவதை தடுக்கும் வகையில் மின்சாரத்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டது.

மொத்தம் இரண்டு தளங்கள் கொண்ட கட்டிடத்தின், தரை தளத்தில் இருந்த துணிகள் முற்றிலும் தீப்பற்றி எரிந்ததால் தீயணைப்புத் துறை வாகனத்துடன், கூடுதலாக செந்துறை தீயணைப்பு நிலையத்திலிருந்தும், தனியார் சிமென்ட் தொழிற்சாலைக்கு சொந்தமான தீயணைப்பு வாகனங்களும் விரைந்து வந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டன. மேலும் ஜேசிபி வாகனம் வரவழைக்கப்பட்டு துணிக்கடையின் பிரதான இரும்பு கதவை உடைத்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். 2 மணி நேர போராட்டத்துக்கு பின்னர் தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீ விபத்தில் தீபாவளி அன்று விற்பனை முடித்து கடையிலேயே வைத்திருந்த, ரூ.3 லட்சம் பணம் எரிந்து சாம்பலாகின. மேலும், தீபாவளி பண்டிகை காலம் என்பதால் மிச்சம் இருந்த புதிய ரக துணிகள், கம்ப்யூட்டர் சாதனங்கள், மின்சார சாதனங்கள், பர்னிச்சர்கள் ஆகிய பல லட்சம் மதிப்பிலான பொருட்கள் முற்றிலும் எரிந்து சாம்பலாகான்.

இதனிடையே, விபத்து குறித்து அரியலூர் காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். பண்டிகை காலத்தில் ஏற்பட்ட ஜவுளிக் கடை தீ விபத்தால் அரியலூர் நகரில் வியாபாரிகள் மத்தியில் சோகம் நிலவியுள்ளது.

## பிஹார் தேர்தல்: 143 வேட்பாளர்களின் பட்டியலை வெளியிட்டது ஆர்ஜேடி



பாட்னா, அக்.22-

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் 143 வேட்பாளர்களின் பட்டியலை பிரதான எதிர்க்கட்சியான ராஷ்ட்ரிய ஜனதா தளம்(ஆர்ஜேடி) வெளியிட்டுள்ளது.

ஆர்ஜேடி வெளியிட்டுள்ள பட்டியலின்படி, அக்கட்சியின் இளம் தலைவரும் தற்போதைய சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான தேஜஸ்வி யாதவ், வைஷாலி மாவட்டத்தின் ரகோபூர் தொகுதியில் போட்டியிடுகிறார். ரேணு குஷ்வாஹா, பிஹாரிகஞ்ச் தொகுதியிலும், அருண் குப்தா பர்ஹாரியா தொகுதியிலும் விஷால் ஜெய்ஸ்வால் மகாராஜ்கஞ்ச் தொகுதியிலும் போட்டியிடுகின்றனர்.

ஆர்ஜேடி, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் அடங்கிய மகாகட்பந்தன் கூட்டணியில் தொகுதிப் பங்கீடு நிறைவடையாமல் இருந்த நிலையில், இந்த பட்டியல் வெளியாகி உள்ளது. காங்கிரஸ் கட்சியும் புதிதாக 6 வேட்பாளர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதன்மூலம் அக்கட்சி 60 தொகுதி களுக்கான வேட்பாளர்களை அறிவித்துள்ளது.

முதல்கட்டத் தேர்தல் நடைபெற உள்ள 121 தொகுதிகளில் வேட்புமனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான கடைசி நாள் இன்று நிறைவடைய உள்ள நிலையில் இந்த பட்டியல்கள் வெளியாகி உள்ளன.

பிஹாரில் மொத்தமுள்ள 243 தொகுதிகளுக்கான சட்டப்பேரவைத் தேர்தல் நவம்பர் 6 மற்றும் 11 ஆகிய இரு தேதிகளில் நடைபெற உள்ளது. இதில், பதிவாகும் வாக்குகள் நவம்பர் 14ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

# டெல்டா மாவட்டங்களில் 40% அளவுக்கு மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது: அன்புமணி

சென்னை, அக்.22-

காவிரி பாசன மாவட்டங்களில் கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு செல்லப்பட்ட நெல்லில் 40% அளவுக்கு மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. மீதமுள்ள 60% நெல் இன்னும் கொள்முதல் செய்யப்படாமல் திறந்த வெளிகளில் கொட்டி வைக்கப்பட்டிருக்கிறது என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'காவிரி பாசன மாவட்டங்களில் குறுவை பருவ நெல் கொள்முதலில் நடக்கும் அநீதிகளையும், குளறுபடிகளையும் பலமுறை சுட்டிக்காட்டியும் அவற்றை சரி செய்ய தமிழக அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. பருவமழைக்கு முன்பாகவே நெல்லை கொள்முதல் செய்யுங்கள்; நெல் கொள்முதலுக்கான ஈரப்பத வரம்பை 25% ஆக அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளுங்கள் என பாட்டாளி மக்கள் கட்சியும் விவசாய அமைப்புகளும் பல முறை வலியுறுத்தியும் அவற்றை செய்யத் தவறியதன் மூலம் விவசாயிகளுக்கு அரசு துரோகம் செய்துள்ளது.

காவிரி பாசன மாவட்டங்களில் நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்து வைக்கப்பட்டிருக்கும் நெல் மூட்டைகள் அங்கிருந்து கிடங்குகளுக்கு கொண்டு செல்லப்படாதது குறித்தும், கொள்முதல் நிலையங்களுக்கு விவசாயிகள் கொண்டு சென்ற நெல் கொள்முதல் செய்யப்படாமல் குவித்து வைக்கப்பட்டிருப்பது குறித்தும் கடந்த 10ம் தேதி வெளியிட்ட அறிக்கையில் விரிவாக விளக்கி நிலைமையை சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தேன்.

ஆனால், விவசாயிகள் இவ்வளவு துயரத்தை அனுபவித்து வரும் போதிலும், அதைப் போக்க தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காததால் அதே நிலை தான் இன்னும் தொடர்கிறது. விவசாயிகளைப் பொறுத்தவரை இந்த ஆண்டும் தீபாவளி இருளாகத் தான் அமைந்தது.

காவிரி பாசன மாவட்டங்களில் குறுவை சாகுபடி செய்யப்பட்டிருக்கும் 6.13 லட்சம் ஏக்கர் பரப்பில் சுமார் 70% அறுவடை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அவ்வாறு அறுவடை செய்யப்பட்டு கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு செல்லப்பட்ட நெல்லில் 40% அளவுக்கு மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. மீதமுள்ள 60% நெல் இன்னும் கொள்முதல் செய்யப்படாமல் திறந்த வெளிகளில் கொட்டி வைக்கப்பட்டிருக்கிறது.

காவிரி பாசன மாவட்டங்களில் தொடர்ந்து மழை பெய்து வரும் நிலையில், அறுவடை செய்யப்படாத வயல்களில் நெல் மணிகள் உதிர்ந்து முளைத்து விடும் ஆபத்து இருப்பதால், உடனடியாக அறுவடை செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். அடுத்த ஒரு வாரத்திற்குள் குறுவை நெல் அறுவடை முற்றிலுமான முடிவடைந்து விடும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், கூடுதலாக வரும் நெல்லும் கொள்முதல் நிலையங்களில் கிடத்தப்பட்டு மழையில் நனைந்து வீணாகும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. அதைத் தடுக்க திமுக அரசு என்ன செய்யப்போகிறது?



கொள்முதல் நிலையங்களில் நெல் தேங்கியிருப்பதற்காக தமிழக அரசு இல்லாத காரணங்களையெல்லாம் கூறி வருகிறது. செறிவூட்டப்பட்ட அரிசி கொள்முதல் செய்வதற்கான வழிகாட்டுதல்களை மத்திய அரசு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டிருந்தால், விவசாயிகளின் நலன்களை கருத்தில் கொண்டு மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து விரைவாக பெற திமுக அரசு தான் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

ஆனால், மத்திய அரசு அதன் வழிகாட்டுதல்களை ஜூலை 29ஆம் தேதி வழங்கிய நிலையில், அதன்பின் செறிவூட்டப்பட்ட அரிசியை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய 71 நாள்கள் தமிழக அரசு எடுத்துக் கொண்டது. குறுவை பருவத்தில் சாகுபடி செய்யப்படும் நெல்லை விவசாயிகளுக்கு பாதிப்பு இல்லாமல் கொள்முதல் செய்யத் தேவையான நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ள வேண்டியது அரசின் கடமை. அந்தக் கடமையில் இருந்து தவறி விட்டு, இல்லாத காரணங்களைக் கூறி பொறுப்பைத் தட்டிக்கழிக்க முயல்வது அரசுக்கு அழகல்ல.

கொள்முதல் நிலையங்களில் நெல் அதிக அளவில் தேங்கிக் கிடப்பதற்கு இன்னொரு முதன்மைக் காரணம் போதிய எண்ணிக்கையில் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படாதது ஆகும். 10 காவிரி பாசன மாவட்டங்களில் கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் இரு மடங்கு, அதாவது 1805 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

உண்மையில் கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் இம்மாவட்டங்களில் 2156 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன; 2022 23 ஆம் ஆண்டில் 2094 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன. அவற்றுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டில் கிட்டத்தட்ட 350 கொள்முதல் நிலையங்கள் குறைவாகவே திறக்கப்பட்டுள்ளன.

அதிலும் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் கடந்த ஆண்டு 599 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருந்த நிலையில், இப்போது 292 மட்டுமே திறக்கப்பட்டுள்ளன. திருவாரூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டின் எண்ணிக்கையான 535 நிலையங்களை விட குறைவாக 173 நிலையங்களும், நாகை மாவட்டத்தில் 176 கொள்முதல் நிலையங்களுக்கு பதிலாக 124 நிலையங்களும், மயிலாடுதுறை மாவட்டத்தில் 179 நிலையங்களுக்கு பதில் 144 மையங்களும் மட்டும் தான் திறக்கப்பட்டுள்ளன.

கொள்முதல் செய்யப்படும் நெல்லின் ஈரப்பத அளவை 25% ஆக உயர்த்த அனுமதிக்கும்படி மத்திய அரசிடம் பேசி ஒப்புதல் பெற வேண்டும் என்று கடந்த 10ஆம் தேதியே நான் வலியுறுத்தியிருந்த நிலையில், மிகவும் தாமதமாக 18ஆம் தேதி தான் மத்திய அரசுக்கு தமிழக அரசு கடிதம் எழுதியுள்ளது.

அந்தக் கடிதம் மத்திய அரசின் கவனத்திற்கு சென்றதா? என்பது கூட தெரியாத நிலையில், மத்திய அமைச்சர் அல்லது அதிகாரிகளை நேரில் சந்தித்து வலியுறுத்த தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பருவமழை தீவிரமடைந்து வரும் நிலையில், தமிழக அரசு இந்த அளவுக்கு அலட்சியம் காட்டுவது விவசாயிகளுக்கு செய்யும் துரோகமாகும்.

கொள்முதல் செய்யப்படும் நெல்லை மூட்டை கட்டி கிடங்குகளுக்கும், ஆலைகளுக்கும் அனுப்புவதற்காக மேற்கு வங்கத்தில் இருந்து சாக்குகள் வாங்கப்பட்டிருப்பதாக அரசு கூறி வரும் நிலையில், அனைத்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலும் சாக்குகளுக்கு பெருமளவில் பற்றாக்குறை நிலவுவதாக கொள்முதல் நிலையப் பணியாளர்களும், விவசாயிகளும் கூறுகின்றனர். அதேபோல், கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை கிடங்குகளுக்கு கொண்டு செல்ல போதிய எண்ணிக்கையில் சரக்குந்துகளும் இல்லை எனக் கூறப்படுகிறது.

இவ்வளவு குறைகளை வைத்துக் கொண்டு நெல்லை கொள்முதல் செய்ய போதிய ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன என்று வெற்று வசனங்களை மட்டுமே திமுக அரசு பேசிக் கொண்டிருக்கிறது. இதனால் யாருக்கும், எந்த பயனும் இல்லை.

இதனால், இத்தகைய விளம்பர நாடகங்களை அரங்கேற்றுவதை விடுத்து, குறுவை நெல் மேலும், மேலும் மழையில் நனைந்து வீணாவதைத் தடுக்கும் வகையில், கூடுதல் கட்டமைப்புகளை ஏற்படுத்தி தேங்கிக் கிடக்கும் நெல் முழுவதையும் அடுத்த ஒரு வாரத்தில் கொள்முதல் செய்து முடிக்க திமுக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்; அதன் மூலம் விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பைக் குறைக்க வேண்டும்' எனத் தெரிவித்துள்ளார்.

## திருச்செந்தூர் முருகன் கோயிலில் கந்த சஷ்டி திருவிழா அக்.22ம் தேதி தொடக்கம்

தூத்துக்குடி, அக்.22-

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் பிரசித்தி பெற்ற கந்த சஷ்டி திருவிழா வரும் 22ம் தேதி தொடங்குகிறது. இதையொட்டி, அன்று அதிகாலை 1 மணிக்கு நடைதிறக்கப்படுகிறது. தொடர்ந்து பல்வேறு பூஜைகள் நடத்தப்பட்டு, காலை 7 மணிக்கு யாகசாலை பூஜையுடன் கந்தசஷ்டி திருவிழா தொடங்குகிறது.



அன்று சுவாமி ஜெயந்திநாதர் வள்ளிதெய்வானையுடன் தங்கச்சப்பரத்தில் சண்முகவிலாச மண்டபத்துக்கு எழுந்தருள்கிறார். அங்கிருந்து திருவாவடுதுறை ஆதீன சஷ்டி மண்டபத்துக்கு செல்கிறார். அங்கு சுவாமி, அம்மனுக்கு அபிஷேகம், அலங்காரம் செய்யப்பட்ட பின்னர், சுவாமி, அம்மனுடன் தங்க ரதத்தில் எழுந்தருளி கிரி வீதியில் பவனி வந்து கோயில் சேர்கிறார்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் வரும் 27ம் தேதி நடைபெறுகிறது. அன்று மாலை 4.30 மணிக்கு சுவாமி ஜெயந்திநாதர் சூரசம்ஹாரத்துக்கு எழுந்தருள்கிறார். பின்னர் கடற்கரையில் சுவாமி ஜெயந்திநாதர், சூரபத்மனை வதம் செய்யும் நிகழ்ச்சி நடைபெறும். தொடர்ந்து சந்தோஷ மண்டபத்தில் சுவாமிக்கும், அம்மனுக்கும் மகா தீபாராதனை நடைபெறும்.

வரும் 28ம் தேதி அதிகாலை தெய்வானை அம்மன் கோயிலில் இருந்து தபசு காட்சிக்கு புறப்படுகிறார். மாலை 6 மணியளவில் அம்மனுக்கு, சுவாமி காட்சி அருளி தோள் மாலை மாற்றும் வைபவம் நடக்கிறது. இரவு சுவாமி குமரவிடங்க பெருமானுக்கும், தெய்வானை அம்மனுக்கும் திருக்கல்யாணம் நடக்கிறது. விழாவுக்கான ஏற்பாடுகளை கோயில் தக்கார் ரா.அருள்முருகன், இணை ஆணையர் க.ராமு உள்ளிட்டோர் செய்து வருகின்றனர்.



## கனமழை காரணமாக திம்பம் மலைப்பாதையில் மண் சரிவு: தீபாவளி தினத்தில் போக்குவரத்து பாதிப்பு

சத்தியமங்கலம், அக்.22-

திம்பம் மலைப்பாதை மற்றும் கடம்பூர் மலைப்பாதையில் மண் சரிவு ஏற்பட்டதால், தீபாவளி தினத்தன்று போக்குவரத்து பாதிக்கப்பட்டது. ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் மைசூர் தேசிய நெடுஞ்சாலையில் பண்ணாரி அம்மன் கோயில் அடுத்த வனப்பகுதியில் 27 கொண்டை ஊசி வளைவுகளுடன் கூடிய திம்பம் மலை பாதை அமைந்துள்ளது. இந்த மலைப்பாதை வழியாக தமிழககர்நாடக மாநிலங்களுக்கிடையே வாகன போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று காலை வரை பெய்த கனமழை காரணமாக திம்பம் மலைப்பாதையில் 7, 8, 20 மற்றும் 27வது கொண்டை ஊசி வளைவுகளில் மொத்தம் 4 இடங்களில் மண் சரிவு ஏற்பட்டது. இதன் காரணமாக நேற்று காலை திம்பம் மலைப்பாதையில் வாகனங்களை இயக்க முடியாத நிலை ஏற்பட்டது. தகவலறிந்து தேசிய நெடுஞ்சாலை துறையினர், ஆசனூர் தீயணைப்பு துறை மற்றும் வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று சாலையில் கொட்டி கிடந்த மண் மற்றும் கற்களை பொக்லைன் இயந்திரம் மூலம் அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

பின்னர் சாலை சீரமைக்கப்பட்டு போக்குவரத்து தொடங்கியது. இதேபோல் சத்தியமங்கலத்தில் இருந்து கடம்பூர் செல்லும் மலை பாதையிலும் ஆங்காங்கே மண் சரிவு ஏற்பட்டதால், கடம்பூர் மலை கிராமங்களுக்கு போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அப்பகுதியிலும் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு போக்குவரத்து சீரானது. தீபாவளி தினத்தன்று மலைப்பாதைகளில் மண் சரிவு காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டதால், பயணிகள் மிகுந்த அவதிக்குள்ளாகினர்.



## தெற்கு ரயில்வே 17 நாட்களில் 85 சரக்கு ரயில்களை இயக்கி சாதனை

சென்னை, அக்.22-

சரக்குகளை கையாளும் நிறுவனங்களை, ஊக்கப்படுத்த தெற்கு ரயில்வே சலுகைகள் அளித்து வருகிறது. அந்த வகையில், தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனின் கோரிக்கைகளுக்கு இணங்க, தெற்கு ரயில்வே தமிழகத்தின், டெல்டா மாவட்டங்களுக்கு நேரடி கொள்முதல் மையங்கள் வாயிலாக கொள்முதல் செய்யப்படும் நெல்லை எடுத்து வர சரக்கு ரயிலை இயக்கியது.

தஞ்சை, நாகப்பட்டினம், நீடாமங்கலம், கும்பகோணம், சீர்காழி, மயிலாடுதுறை, பேரளம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, திருவாரூர், பட்டுக்கோட்டை, விருத்தாசலம், செங்கை, புதுக்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள கூட்ஸ் ஷெட்டுகளில் சரக்கு ரயில்கள் இயக்கப்பட்டுள்ளன. தமிழகம் முழுவதும் அக்.1ம் தேதி முதல் 17ம் தேதி வரை 85 ரயில்கள் இயக்கப்பட்டு, 2.3 லட்சம் டன் சரக்குகள் கையாளப்பட்டுள்ளன.

இதே காலகட்டத்தில் கடந்த ஆண்டில் 21 சரக்கு ரயில்களும், 2023ல் 16 சரக்கு ரயில்களும் இயக்கப்பட்டன. அறுவடை செய்யப்பட்ட நெல்லை ரயில் சேவை மூலம் கொண்டு வருவதில் தெற்கு ரயில்வே சிறந்த சேவை வழங்கி வருகிறது.



## மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் விரைவில் 39 பல் மருத்துவ உதவியாளர்கள் நியமனம்

சென்னை, அக்.22-

தமிழ்நாடு மருத்துவ சார்நிலைப் பணியின் கீழ் வரும் பல் மருத்துவ உதவியாளர் பதவியில் 39 காலி பணியிடங்களை நேரடி நியமன முறையில் நிரப்ப ஆன்லைன் வாயிலாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பிளஸ் 2 (அறிவியல் பாடங்கள்) முடித்துவிட்டு பல் மருத்துவத்தில் டிப்ளமா படிப்பு படித்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். தமிழ்நாடு பல் மருத்துவ கவுன்சிலில் பதிவுசெய்திருக்க வேண்டியது அவசியம்.

தகுதியுடைய நபர்கள் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் இணையதளத்தை (www.mrb.tn.gov.in) பயன்படுத்தி நவம்பர் மாதம் 2ம் தேதிக்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்த காலி பணியிடங்களில் தமிழ் வழியில் படித்தவர்களுக்கு 20 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு 1ம் வகுப்பு முதல் நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியான பல்மருத்துவ டிப்ளமா படிப்பு வரை தமிழ் வழியில் படித்திருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## மெட்ரோ சேவைக்கு பயணிகள் 5க்கு 4.3 மதிப்பெண் வழங்கல்: கம்யூனிட்டி ஆஃப் மெட்ரோஸ் ஆய்வில் தகவல்

சென்னை, அக்.22-

சென்னை மெட்ரோ ரயில் சேவைகளுக்கான ஒட்டு மொத்த பயணிகளின் திருப்தி மதிப்பெண் 5க்கு 4.3 ஆக இருப்பதாக 'கம்யூனிட்டி ஆஃப் மெட்ரோஸ்' ஆய்வில் தெரியவந்துள்ளது. கம்யூனிட்டி ஆஃப் மெட்ரோஸ் (Community of Metros) என்பது உலகம் முழுவதும் உள்ள நகர்ப்புற மெட்ரோ ரயில் சேவைகளின் செயல்பாடுகளை ஒப்பிட்டு, தரநிலைகளை நிர்ணயிக்கும் ஒரு சர்வதேச அமைப்பு ஆகும்.



இந்த அமைப்பில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் 2024ம் ஆண்டில் புதிய உறுப்பினராகச் சேர்ந்தது. உலகத் தரத்திலான செயல்பாடுகளை அடைவதற்கும், முன்னேற்றங்களை மேற்கொள்வதற்கும் இது முக்கிய கவனம் செலுத்துகிறது. இதற்கிடையில், கம்யூனிட்டி ஆஃப் மெட்ரோஸ் கடந்த ஆகஸ்டில் இணையதளம் மூலமாக பயணிகள் திருப்தி குறித்த கருத்துப் பதிவை நடத்தியது.

இதில் சுமார் 6,500 வாடிக்கையாளர்களிடம் இருந்து பதில்களைப் பெற்று சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் முதலிடம் பிடித்துள்ளது. இந்தக் கணக்கெடுப்பு பற்றிய விளம்பரம் சுவரொட்டிகள், இணையதளம் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் செய்யப்பட்டது. இந்தக் கணக்கெடுப்பானது சேவைத் தரம், அணுகல், கிடைக்கும் தன்மை, நம்பகத்தன்மை, பாதுகாப்பு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டிருந்தது.

இந்த கணக்கெடுப்பில் உலகெங்கிலும் உள்ள 32 மெட்ரோ ரயில் நிறுவனங்கள் பங்கேற்றன. இந்நிலையில், இந்த ஆய்வின் முடிவுகள் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளன. சென்னை மெட்ரோ ரயில் சேவைகளுக்கான ஒட்டு மொத்த வாடிக்கையாளர் திருப்தி மதிப்பெண் 5க்கு 4.3 ஆக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆய்வு அறிக்கை விவரம்: இந்த ஆய்வுக்குப் பதிலளித்தவர்களில் சுமார் 64 சதவீதம் பேர் ஆண்கள், 33 சதவீதம் பேர் பெண்கள் மற்றும் 3 சதவீதம் பேர் மற்றவர்கள் ஆவர். மேலும் பெரும்பாலான பயணிகள் இளம் வயதினர் (30 வயதுக்கு உட்பட்டவர்கள்). பலர் பணி நிமித்தமாக மெட்ரோ ரயில்களை பயன்படுத்துகின்றனர்.

பயணிகள் கட்டணம் செலுத்தும் முறைகள், கூடுதல் இட வசதி, மெட்ரோ நிலையங்களுக்கு இடையேயான இணைப்பு வசதி மற்றும் நிலையங்களை எளிதாக அணுகும் வசதி ஆகியவற்றில் மேம்பாடுகளை எதிர்பார்க்கின்றனர். இவ்வாறு அதில் தெரிய வந்துள்ளது. இதுகுறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறுகையில், "பயணிகளின் மதிப்புமிக்க கருத்துகளுக்கு நன்றி. பயணிகளின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ய, தொடர்ச்சியான மேம்பாடுகளைச் செய்ய உறுதி அளிக்கிறோம்" என்றனர்.

## அறுந்து கிடக்கும் மின்கம்பிகள் குறித்து பொதுமக்களுக்கு மின்வாரியம் எச்சரிக்கை

சென்னை, அக்.22-

அறுந்து கிடக்கும் மின்கம்பிகள் அருகில் செல்ல வேண்டாம் என மக்களை மின்வாரியம் அறிவுறுத்தியுள்ளது. மழைக் காலங்களில் பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து மின்வாரியம் வெளியிட்ட அறிக்கை: ஈரமான கைகளால் மின் சுவிட்சுகள், மின்சாதனங்களை இயக்க முயற்சிக்க வேண்டாம், வீட்டின் உள்புறசுவர் ஈரமாக இருந்தால் சுவிட்சுகள் எதையும் இயக்கக் கூடாது, ஈரப்பதமான சுவர்களில் கை வைக்க கூடாது.




மேலும் நீரில் நனைந்த அல்லது ஈரப்பதமான மின்விசிறி, லைட் உட்பட எதையும் மின்சாரம் வந்தவுடன் இயக்க வேண்டாம், மின்கம்பிகள் அறுந்து கிடக்கும் பகுதிகள், மின்சார கேபிள்கள், மின்சார கம்பங்கள், பில்லர் பாக்ஸ் மற்றும் டிரான்ஸ்பார்மர்கள் இருக்கும் பகுதிகளுக்கு அருகில் செல்வது தவிர்க்க வேண்டும்.

சாலைகளிலும், தெருக்களிலும் மின்கம்பங்கள் மற்றும் மின்சாதனங்களுக்கருகே தேங்கிக்கிடக்கும் தண்ணீரில் நடப்பேதா, ஓடுவேதா, விளையாடுவதோ மற்றும் வாகனத்தில் செல்வேதா தவிர்க்கப்பட வேண்டும். மின்சேவை, மின்கம்பி அறுந்துவிழுதல், மின்தடை குறித்த புகார்களுக்கு உடனடியாக மின்னகத்தை "94987 94987" தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.



■ சிவகங்கை மாவட்டத்தில் மதுவிலக்கு, குற்ற வழக்குகளில் ஈடுபட்ட 39 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி 39 இருசக்கர வாகனங்களை ("உள்ளது உள்ளபடி") காவல் கண்காணிப்பாளர், சிவகங்கை மாவட்டம் அவர்கள் தலைமையிலும், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தலைமையிடம், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், மதுவிலக்கு பிரிவு, உதவி ஆணையர், ஆயம் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர், அரசு தானியங்கி பணிமனை, சிவகங்கை ஆகியோர்கள் முன்னிலையில், சிவகங்கை மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் வரும் 25.10.2025ம் தேதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலம் நடைபெறவுள்ளது. ஏலத்தில் கலந்துகொள்ள விரும்புவர்கள், பொது ஏலம் நடைபெறுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக தங்களது ஆதார் அட்டை நகலுடன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு அலுவலகத்தில் முன்பணம் செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு செய்தவர்கள் மட்டுமே பொது ஏலத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.



■ தேனி மாவட்டம் வைகை அணையின் நீர்மட்டம் இன்று 20.10.2025 நண்பகல் 1.00 மணி அளவில் 69.00 அடியை எட்டியதை தொடர்ந்து அணைக்கு வரும் உபரிநீர் வைகை ஆற்றில் திறக்கப்பட்டுள்ளது. திறக்கப்பட்டுள்ள நீரின் அளவு வினாடிக்கு 1000 கனஅடி என்ற வீதத்தில் உள்ளது. எனவே தேனி, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வைகை ஆற்றின் கரையோரம் வசிக்கும் கிராம மக்கள் ஆற்றில் இறங்கவோ, ஆற்றை கடக்கவோ, ஆற்றில் அறிவுறுத்தப்படுகிறது. குளிக்கவோ கூடாது என உதவிசெயற்பொறியாளர், நீவது., வைகை அணை உபகோட்டம், வைகை அணை. அறிவித்துள்ளார்.



# புனித வின்சென்ட் தே பவுல் சபை வட்டார சபை கூட்டம்

காளையார்கோவிலில், அக்.22-

புனித வின்சென்ட் தே பவுல் சபை சிவகங்கை மத்திய சபைக்கு உட்பட்ட சூசையப்பர்பட்டணம் வட்டார சபையின் 2 ஆவது காலாண்டு கூட்டம் காளையார்கோவில் புனித அருளானந்தர் கிளைச்சபையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வட்டார சபை முதன்மை பணியாளர் அருள் தலைமை வகித்து தலைமையுரையாற்றினார். பங்குதந்தையும் ஆன்மீக ஆலோசகருமான அருள்பணி சேசு மத்தியசபை முதன்மை பணியாளர் பெர்னாட்ஷா முன்னிலை வகித்தனர். கூட்டம் ஆவியானவர் பாடல் மற்றும் தொடக்க ஜெபத்துடன் ஆரம்பமானது. காளையார்கோவில் கிளைச்சபை முதன்மை பணியாளர் ஆரோக்கியசாமி அனைவரையும் வரவேற்றார். பொருளாளர் ஜேம்ஸ் இறப்புக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. செயலாளர் அருள்தாஸ் சென்ற காலாண்டு கூட்ட அறிக்கை வாசித்தார். வட்டார முதன்மை பணியாளர் அருள் காலாண்டு வரவு செலவு வாசித்தார். மத்திய சபை கல்வித் திட்ட அலுவலர் சகோதரர் சூசைராஜ் சிறப்பு அழைப்பாளராக சி கே மங்களம் வட்டாரசபை முதன்மை பணியாளர் மாணிக்கம் வாழ்த்துரை வழங்கினர். ஆன்மீக ஆலோசகர் அருள்தந்தை வாழ்த்துரை வழங்கி ஆசியுரை வழங்கினார். வட்டாரசபை மூலம் காளையார்கோவில் கிளைச்சபையை சேர்ந்த இரண்டு மாணவிகளுக்கு கல்வி உதவி வழங்கப்பட்டது. மத்தியசபை முதன்மை பணியாளர் பெர்னாட்ஷா சிறப்புரையாற்றினார். கிளைச் சபை உறுப்பினர் லூர்துராஜ் நன்றி கூறினார். இறுதிச்செபம் ஜான் அந்தோணி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.





■ தென்காசி மாவட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர் தென்காசி MP ராணிஸ்ரீ குமார் மாவட்ட திமுக பொறுப்பாளர் ஜெயபாலன் கடையநல்லூர் நகர் மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான் ஆகியோர் குற்றாலம் மெயின் அருவியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



# சொந்த ஊருக்கு வெளிச்சம் பாய்ச்சிய காவல் தம்பதியினர்: கடலூர் எஸ்பி பாராட்டு

கடலூர், அக்.22-

தங்களது சொந்த ஊருக்கு உயர் கோபுர மின் விளக்கு அமைத்து வெளிச்சம் பாய்ச்சிய காவல் தம்பதியினரை கடலூர் எஸ்பி ஜெயக்குமார் பாராட்டி கவுரவித்துள்ளார்.

கடலூர் மாவட்டம் பண்ருட்டி வட்டம் கொங்கராயனூர் கிராமத்தை சேர்ந்தவர் அருண்குமார். இவர் கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் அதி விரைவு படையில் பணியாற்றி வருகிறார். இவரது மனைவி காயத்ரி, கடலூர் மாவட்ட ஆயுதப் படையில் பணியாற்றி வருகிறார். தனது சொந்த கிராமம் கொங்கராயனூர் பேருந்து நிறுத்தத்தில் இரவு நேரத்தில் வெளிச்சம் இல்லாததால், பேருந்துக்காக காத்திருக்கும் பயணிகள் அச்சத்தோடு காத்திருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டிருப்பதோடு, சில சமூக விரோத செயல்களும் நிகழ்ந்துள்ளது.

இதையடுடுத்து பேருந்துக்காக காத்திருக்கும் பயணிகளின் பாதுகாப்புக் கருதி காவல் தம்பதியர் தங்களது சொந்த பணத்தில் ரூ.60 ஆயிரம் செலவில் உயர் கோபுர மின் விளக்கு அமைத்துள்ளனர். பொதுமக்கள் பயன்பெறும் வகையில் உயர் கோபுர மின் விளக்கு அமைத்த காவலர் தம்பதியர் அருண்குமார் காயத்ரி ஆகியோரை கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் இன்று நேரில் அழைத்து பொன்னாடை அணிவித்து பாராட்டினார்.



## பொழிச்சலூரில் புனித தோமையர் வடக்கு ஒன்றிய பொருளாளர் ஆர்.ராஜா ஏற்பாட்டில் தீபாவளி பண்டிகை முன்னிட்டு 750 பேருக்கு நலத்திட்ட உதவி

பொழிச்சலூர், அக்.22-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் புனிததோமையர் மலை வடக்கு ஒன்றிய பொருளாளர் ஆர்.ராஜா ஏற்பாட்டில் தீபாவளி பண்டிகையொட்டி நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைப்பெற்றது. இதில்பொழிச்சலூரில் உள்ள அனைத்து கிளை கழக நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் என சுமார் 750 பேருக்கு புத்தாடை மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

ஆதிதிராவிடர் கிளை கழக செயலாளர் வீரராகவன், வெங்கடேஸ்வர கிளை கழக செயலாளர் பொன் பிராபகரன், மூவர் நகர் கிளை கழக செயலாளர் பிரசாந்த் மற்றும் திமுக நிர்வாகிகள் நித்யா, குருமூர்த்தி, பச்சையப்பன், முருகன், மாங்காளி, நாகேஷ் மற்றும் பொழிச்சலூர் கிளை கழக மாணவர் அணி, மகளிர் அணி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# எனக்கு புதிய பொறுப்பு வழங்கிய மாநில மாவட்ட நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன்

தாம்பரம், அக்.22-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் நகரத்தில் பாரதிய ஜனதா கட்சியில் வார்டு பொறுப்பாளராக, நகர செயலாளராக, நகர பொது செயலாளராக,மண்டல தலைவராக, மாவட்ட செயலாளராக, மண்டல பார்வையாளாரக பல்வேறு பதவிகள் அளித்து என்ன கட்சி பணியாற்றிட ஊக்குவித்த மாநில மாவட்ட பாஜக நிர்வாகிகளுக்கு நன்றி.இப்போது செங்கல்பட்டு மாவட்டம் தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சியின்



செங்கல்பட்டு வடக்கு மாவட்ட ஓபிசி அணியின் மாவட்ட தலைவராக வி.குருநாதன் ஆகிய என்னை அறிவித்து கட்சி பணிகளை ஆற்றிட வாய்ப்புகள் அளித்த மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் ஜி அவர்களுக்கும், ஓபிசி அணியின் மாநில தலைவர் திரு. வீர திருநாவுக்கரசு ஜி அவர்களுக்கும், மாவட்டத்தலைவர் அண்ணன் திரு. சிங்கை ந.ரகுராமன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன் மற்றும் எனக்கு துணையாக இருந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன்.




# செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக சார்பில் அதிமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது

சேலையூர், அக்.22-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த சேலையூர் பகுதியில் உள்ள தனியார் மண்டபத்தில் மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் செங்கல்பட்டு மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட கழக வட்டக் கழக பகுதி கழக அணி சார்பு அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

மாவட்ட கழக அவைத் தலைவர் பொன்னுசாமி முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் டி கே எம் சின்னையா முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தன்சிங் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

அப்போது எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் ஆற்ற வேண்டிய ஆக்கப்பூர்வமான பணிகள் குறித்து கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக பொருளாளர் பரசுராமன், பகுதி கழக செயலாளர்கள் இரா. மோகன், கூத்தன், எல்லார் செழியன், கோபிநாத், சேலையூர் சங்கர், ஜெயபிரகாஷ், சந்திர சேகர் ராஜா, பெருங் களத்தூர் வளையாபதி, பெருங்களத்தூர் சீனுபாபு, ஒன்றிய கழகச் செயலாளர்கள் மதுரபாக்கம் எம்பி மனோகரன், முடிச்சூர் சார்பில் கலந்து கொண்ட நிர்வாகிகள் முடிச்சூர் ஸ்ரீ பாஸ்கர், தவமணி, மூர்த்தி, லலிதா சுரேந்திரன், ஜோதிஸ்வரி, ராஜேந்திரன், கஜேந்திரன், ஆதிகேசவன், ராஜா, செந்தில் குமார், கார்த்திக், ரமேஷ், சற்குணம், சிவா, மாரி, சாமிநகர் ராஜேந்திரன், திருமலை, ஜெயமுருகன், சந்தானம், கணேசன், மகாதேவி, இந்திரா, ஸ்டெல்லா, நாகலட்சுமி, மாணிக்கம், அன்பரசி, நிகழ்ச்சியின் முடிவில் தீபாவளி விருந்தாக மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன் அவர்களின் ஏற்பாட்டில் கோழி பிரியாணியும் வழங்கப்பட்டது

# விருதுநகரில் மழையால் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா ரூ.4 லட்சம் நிவாரணம்: அமைச்சர் தங்கம் தென்னரசு

விருதுநகர், அக்.22-

தொடர் மழையால் உயிரிழந்த 2 பேரின் குடும்பத்துக்கு ரூ.4 லட்சம் நிவாரணம் அரசு சார்பில் உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு கூறினார்.

விருதுநகர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் சுகபுத்ரா மற்றும் அனைத்துத் துறை அலுவலர்களுடன் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு இன்று ஆய்வு மேற்கொண்டார்.




அப்போது அவர் அளித்த பேட்டியில், "வடகிழக்கு பருவமழையையொட்டி விருதுநகர் மாவட்டத்தில் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பாக மாவட்ட ஆட்சியர் மற்றும் பல்வேறு துறை அதிகாரி களுடன் இதுவரை என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, அடுத்து மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து விரிவான ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

விருதுநகர் மாவட்டத்தில் எந்த சூழ்நிலையையும் சந்திக்கும் வகையில் மாவட்ட நிர்வாகம் முழு அளவில் தயாராக உள்ளது. பல்வேறு துறைகளை சார்ந்தவர்களும் தங்கள் துறை சார்ந்த நடவடிக்கைகள் குறித்து விளக்கியுள்ளனர். கடந்த 2 நாள்கள் பெய்த தொடர் மழையால் மாவட்டத்தில் 2 பேர் உயிரிழந்துள்ளனர். 19 குடிசை வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இறப்பு ஏற்பட்ட குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேவேளையில் அவர்களுக்கு உரிய நிவாரணமாக ரூ.4 லட்சம் அரசு சார்பில் உடனடி யாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். ராஜபாளையம் பகுதியில் ஒரே இடத்தில் சுற்றுச்சுவர் விழுந்து 35 ஆடுகள் இறந்துள்ளன. அதற்கும் உரிய இழப்பீடு வழங்கப்படும். வீடுகள் பாதிக்கப்பட்டோருக்கு, குடிசை வீடுகளுக்கு ரூ.4 ஆயிரம் வீதம் நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பராமரிப்பைத் தாண்டி, சேதமடைந்த வீடுகளை சீரமைத்துக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

நிவாரணம் வழங்குவது ஒருபுறம் இருந்தாலும் எந்த வகையிலும், உயிர்ச் சேதம் ஏற்படக் கூடாது என்பது தான் முதல்வர் எங்களுக்கு வழங்கியுள்ள ஆணையும் அறிவுரையும் ஆகும். அதுதொடர்பாக அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அணைகள் மிக வேகமாக நிரம்பி வருகின்றன. இதற்காக தேவையான நடவடிக்கைகளை அரசு உடனடியாக எடுக்கும்.

நீர்வளத்துறை, வருவாய்த்துறை மூலம் மழைநீர் தேங்கும் இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. மழை நீர் தேங்கும் இடங்களாக 15 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அங்கு உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும். அணைகள் திறக்கும் போது கீழ் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும். வருவாய்த்துறை இப்பணிகள் ஒருங்கிணைக்கும்." என்றார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161